

## அக்டோபர் 27-ல் கோட்டை நோக்கி

# தலித் - பழங்குடி மக்களின் உரிமைப் பேரணி

**நா**டு விடுதலையடைந்து 62 ஆண்டுகள் கடந்த பின்பும் தலித் மக்களுக்கு எதிரான தீண்டாமைக் கொடுமைகள், வன்கொடுமைகள் நீடிக்கின்றன. தலித் பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாவது அன்றாட நிகழ்வாக உள்ளது. இவர்களுக்கு மனித உரிமைகளை நிலை நாட்ட மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

குடியுரிமைச்சட்டம் (PCR Act) வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் (1989) மத்திய மாநில அரசுகளால் உறுதிபட அமல்படுத்தப்படவில்லை. புகார் கொடுத்தவர்கள் மீதே வழக்கு பதிவாகும் இழிநிலை தொடர்கிறது. தலித் மக்கள் மீது இழி தொழில்கள் சுமத்தப்படுவதும், அதனால் பலர் உயிரிழப்பதும் தொடர்கதையாக நீடிக்கிறது. கோடிக்கணக்கான தலித் பழங்குடி மக்களுக்கு நில உரிமை என்பது வெறும் கனவாகவே உள்ளது. கல்வி வேலைவாய்ப்பில் சட்டபூர்வமான இட ஒதுக்கீடு கூட முழுமையாக அமலாகவில்லை. தலித் - பழங்குடி மக்கள் தொகைக்கு ஏற்ப அரசு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு என்பது கொள்கைபூர்வமாக ஏற்றுக்கொண்டும் நடைமுறையில் அமலாகவில்லை.

ஆக தலித் - பழங்குடி மக்கள் சமூக ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் ஒடுக்கப்படும் நிலை காலங்காலமாக நீடிக்கிறது. இதற்கு மாற்றம் காண ஜனநாயக இயக்கங்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் தேவை. இந்நோக்கோடு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியானது அருந்ததியர் உள் ஒதுக்கீடு, உத்தபுரம் தீண்டாமை சுவர் உடைத்து தலித் மக்களுக்கு பொதுப்பாதையை மீட்டுக் கொடுத்தது, பல ஆலயங்களில் தலித் மக்களுக்கு சம உரிமை, மயான உரிமை, இரட்டைக்குவளை ஒழிப்பு போன்ற பல போராட்டங்களை நடத்தி தலித் மக்களின் உரிமைகளை மீட்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இப்பாதையில் அடுத்த கட்ட இயக்கமாக **அக்டோபர் 27ல் சென்னை கோட்டை நோக்கி பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்கும் தலித் - பழங்குடி மக்களின் மகத்தான உரிமைப் பேரணியை** நடத்துகிறது.

## தமிழக அரசே!

- ★ மக்கள் தொகைக்கு ஏற்ப தலித் இட ஒதுக்கீட்டை 18 சதத்திலிருந்து 19 சதமாக உயர்த்திடு!
- ★ பாதாளச் சாக்கடைக்குள் அடைப்புகளை அகற்ற, தொழிலாளர்களை இறக்காதே, நவீனக் கருவிகளைப் பயன்படுத்து! இதற்கான அரசாணை வெளியிடு!
- ★ மனிதக்கழிவை மனிதனே அகற்றும் கொடுமைக்கு முடிவு கட்டு! 93ஆம் ஆண்டு மத்திய சட்டத்தை உறுதியுடன் அமல்படுத்து!
- ★ ஏற்றுக்கொண்டபடி வெட்டியான்களை மயான உதவியாளர்களாக பெயர் மாற்றம் செய்து உள்ளாட்சி ஊழியராக்கு!
- ★ ஏற்றுக்கொண்டபடி ஒண்டி வீரனுக்கு நினைவு மண்டபம் எழுப்பிடு!
- ★ தலித் - பழங்குடி பின்னடைவு காலியிடங்களை தாமதமின்றி நிரப்பிடு!
- ★ தலித் பழங்குடி சிறப்பு உட்கூறு திட்டத்திற்கு (உபதிட்டம்) மக்கள் தொகைக்கு ஏற்ப துறைவாரியாக நிதி ஒதுக்கு. முழுமையாக செலவு செய்.
- ★ தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பழுதடைந்த குடியிருப்பு மற்றும் தொகுப்பு வீடுகளை பழுது நீக்கிக் கொடு!
- ★ தலித் மக்களுக்கு நிலம் கொடு! குடிமனைப் பட்டா வழங்கு! பஞ்சமி நிலங்களை மீட்டுக் கொடு! பழங்குடி மக்களுக்கான வனவுரிமைச்சட்டத்தை அமல்படுத்து!
- ★ ஆலயங்களில் தலித் உரிமைகளை நிலை நாட்டு! தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு கட்டு! வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை உறுதியுடன் அமல்படுத்து!
- ★ விடுபட்ட அருந்ததியர் பிரிவை உள்ஒதுக்கீட்டிற்குள் கொண்டு வந்து அதன் அளவை உயர்த்து!

சென்னை மன்றோ சிலையிலிருந்து கோட்டை நோக்கி...

# தலித் பழங்குடி மக்களின் உரிமைப் பேரணி

27-10-2009
காலை 10 மணி

பங்கேற்பு : திருவாளர்கள்

## கே.வரதராஜன்
பொதுச் செயலாளர்
அகில இந்திய விவசாயிகள் சங்கம்

## என்.வரதராஜன்
மாநிலச் செயலாளர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

## அ.சவுந்தரராசன்
பொதுச் செயலாளர்
சிஐடியு தமிழ்நாடு மாநிலக்குழு

## பி.சம்பத்
மாநில அமைப்பாளர்
தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி

## பி.சண்முகம்
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம்

## K.பாலபாரதி, MLA
சட்டமன்ற குழுத் தலைவர், CPI-M

## K.மகேந்திரன், MLA
சென்னை - பெரம்பூர் தொகுதி

## இரா.அதியமான்
நிறுவனர் - ஆதி தமிழர் பேரவை

## கு.ஜக்கையன்
மாநில அமைப்பாளர்
அருந்தமிழர் விடுதலை இயக்கம்

## கே.ஆர்.கணேசன்
பொதுச் செயலாளர்
ஊரக உள்ளாட்சி ஊழியர் சங்கம்

## சி.நிக்கோலஸ்
தலைவர்,
டாக்டர் அம்பேத்கர் பேரவை

## எம்.மரியதாஸ்
தலைவர், அருந்ததியர் மகாசபை

## பரதன்
'களம்' அமைப்பாளர்

## கோவை ரவிக்குமார்
அமைப்பாளர், ஆதிதமிழர் விடுதலை முன்னணி

## K.R.நாகராஜன்
தமிழ்நாடு ஆதி ஆந்திரா
அருந்ததியர் மகா சபை

## சுப்பு
அம்பேத்கர் கிராம மக்கள் மனித
உரிமை இயக்கம்

## S.K.பழனிச்சாமி
அமைப்பாளர்
புரட்சிப் புலிகள் இயக்கம்

## நளன்
இயக்குநர், நவஜீவன் டிரஸ்ட்

## எம்.கௌதமன்
பொதுச் செயலாளர்,
அருந்ததியர் ஜனநாயக முன்னணி

## தண்டபாணி
தலைவர்,
அருந்ததியர் விடுதலை முன்னணி

## எஸ்.ரங்கசாமி
தலைவர்
தமிழ்நாடு வெட்டியான்கள் சங்கம்

## S.S.மாயமலை
மாநில ஆலோசகர்,
தமிழ்நாடு வெட்டியான்கள் சங்கம்

## எஸ்.செல்லையா
தென்சென்னை மாவட்ட அமைப்பாளர்
தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி

## ஆர்.ஜெயராமன்
நகர்மன்றத் தலைவர், திருவொற்றியூர், அமைப்பாளர், வடசென்னை, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி

தலித்-பழங்குடி மக்களே, ஜனநாயக உள்ளம் படைத்தோரே!
அலைகடலென அணி திரண்டு வாரீர்!

# தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி
தமிழ்நாடு மாநிலக்குழு